

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (2.7.2024) முகாம் அலுவலகத்தில், நடிகர் நெப்போலியன் சந்தித்து, தனது மகன் திருமண நிச்சயதார்த்த விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (2.7.2024) முகாம் அலுவலகத்தில், மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் அவர்களின் மகன் கோ.ப.அன்பழகன் சந்தித்து, தனது மகன் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

### விக்கிரவாண்டி ஒன்றியத்தில் வேட்பாளர்

# அன்னியூர் சிவாவை ஆதரித்து அமைச்சர் சா.சி.சிவசங்கர் வாக்குச் சேகரிப்பு!

## அமைச்சர்கள் - பொன். கௌதம சிகாமணி பங்கேற்பு!

அரியலூர், ஜுலை 3 –

விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க. தலைமையிலான I.N.D.I.A கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து, விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம், தும்பூர் தாங்கல், தும்பூர்,அசோகபுரி பூங்குனம், உலகலாம்பூண்டி, கொட்டியாம்பூண்டி ஆகிய கிராமத்து வாக்காளப் பெருமக்களிடம், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி. சிவசங்கர், உயர்கல்வித்துறை அமைச்சர் கே.பொன்முடி, கழக கொள்கை பரப்புத் துணைச் செயலாளர் – நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமசந்திரன்,

நிதி மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கௌதம சிகாமணி, கழக சட்டத் திட்ட திருத்த குழு இணைச் செயலாளர் சுபா சந்திரசேகர் ஆகியோருடன் உதயசூரியன் சின்னத்தில் வாக்கு சேகரித்தனர்.

இதில் பெரம்பலூர் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஜெகதீசன், மாவட்ட துணைச் செயலாளர் சி.சந்திரசேகர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பூ. செல்வ ராஜ், இரா.மணிமாறன், நல்லதம்பி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ்.ஆர்.இராமராஜன், மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முன்னாள் எம்.எல்.ஏ. வி.டி.கலைச்செல்வன் தலைமையில்!

# விருத்தாச்சலத்தில் “அழகப்பா நினைவு” கைப்பந்து போட்டி!

## மாவட்ட ஆட்சியர் அருண் தம்புராஜ் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

கடலூர், ஜுலை 3 –

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலத்தில் தென்னிந்திய அளவிலான சேலஞ்சர்ஸ் கைப்பந்து கழகம் நடத்தும் 6ஆம் ஆண்டு “அழகப்பா நினைவு”சுழற்கோப்பை கைப்பந்து போட்டி 3 நாட்கள் நடைபெற்றது.

ஆண்கள் பிரிவில் ஐ.ஓ.பி., எஸ்.ஆர்.எம்., ஜி.எஸ்.டி., வருமான வரித்துறை ஆகிய 4 அணிகளும், பெண்கள் பிரிவில் எஸ்.ஆர்.எம்., ஜே.பி.ஆர்., பி.கே.எஸ்., எஸ்.டி. எ.டி. ஆகிய நான்கு அணிகளும் பங்கேற்றன. இந்த துவக்க விழாவை முன்னிட்டு விளையாட்டு வீரர்கள் பங்கேற்ற பேரணி விருதாச்சலம் பேருந்து நிலையத்தில் இருந்து தொடங்கியது.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.டி.கலைச்செல்வன் தலைமை தாங்கினார். தலைவர் சலீம் செயலாளர் மோகன், பொருளாளர் அருண், சோழன் சம்சுதீன், மேனக் ஷா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக மாவட்ட ஆட்சியர் டாக்டர் அருண் தம்பு ராஜ் கொடியசைத்து பேரணியை தொடங்கி வைத்தார்.

அப்போது விருத்தாச்சலம் துணை போலீஸ் சூப்பிரண்டு ஆரோக்கியராஜ், தாசில்தார் உதயகுமார், இன்ஸ்பெக்டர் முருகேசன், சப் இன்ஸ்பெக்டர் அய்யனார், என்.எல்.சி., கைப்பந்து வீரர் ராஜன் பாபு உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

இந்த பேரணி விருத்தாசலம் பஸ் நிலையத்தில் இருந்து தொடங்கி ஜங்ஷன் சாலை பாலக்கரை வரை நடந்தது.

அதனைத் தொடர்ந்து பெரியார் நகர் நகராட்சி மின்னொளி விளையாட்டு மைதானத்தில் நடந்த போட்டி யில் விருத்தாசலம் கோட்டாட்சியர் சையத் மெஹ்மூத் ஐ.ஓ.பி., எஸ்.ஆர்.எம். ஆண்கள் அணி மோதிய முதல் போட்டியை தொடங்கி வைத்தார்.




### ஏழிசை மன்னர் எம்.கே.தியாகராஜ பாகவதர் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவித்த

# முதல்வருக்கு தமிழ்நாடு விஸ்வகர்ம முன்னேற்றச் சங்கம் நன்றி!

## சங்கக் கூட்டத்தில் தீர்மானம்!

சிதம்பரம், ஜுலை 3 -

சிதம்பரத்தில் நடைபெற்ற தமிழ்நாடு விஸ்வகர்ம முன்னேற்ற சங்க கூட்டத்தில் திரை உலகின் முதல் சூப்பர் ஸ்டார் “ஏழிசை மன்னர்” எம்.கே.தியாகராஜ பாகவதர் பிறந்த நாளான மார்ச் 1ம் தேதியை அரசு விழாவாக கொண்டாடப்படும் என அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு சங்க மாநில தலைவர் ஜி.சேகர் தலைமை தாங்கினார்.

எம். திருஞானம், கு.நடராஜன், தொழிற் சங்க செயலாளர் ஆர். இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகரச் செயலாளர் பி.முத்துக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதர் பிறந்த நாளான மார்ச் 1ம் தேதியை தமிழ்நாடு அரசு அரசு விழாவாக கொண்டாடும் என அறிவித்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், செய்தி ஒளி பரப்பு துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனுக்கும் தமிழ் நாட்டில் வாழுகின்ற 60 லட்சம் விஸ்வகர்ம சமூக மக்களின் சார்பாக இக்கூட்டத்தில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சியில் எஸ். ரமேஷ், எம்.சுரேஷ், ஆர். கனகசபை, ஆர்.சேகர், ஜி.முருகன், ஆர்.சிவா, ராஜா, கே.பாலாஜி, பி. சிவக்குமார், எம்.தண்டபாணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவில் நகரப் பொருளாளர் எஸ்.ராஜ் குமார் நன்றி கூறினார்.

### புதிய குற்றவியல் சட்டங்களை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் ஜூலை 8ந் தேதி வரை

# ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து வழக்கறிஞர்கள் போராட்டம்!

சென்னை, ஜுலை 3 -

ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவந்துள்ள புதிய குற்றவியல் சட்டங்களை எதிர்த்து தமிழ்நாடு முழுவதும் வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்தினர்.

3 குற்றவியல் சட்டங்களையும் மக்களுக்கு விரோதமான முறையில் ஒன்றிய அரசு மாற்றியமைத்து, புதிய சட்டங்களை கொண்டு வந்துள்ளதாக குற்றச்சாட்டினர்.

புதிய சட்டங்களுக்கு வழக்கொழிந்த சமஸ்கிருதத்தில் பெயரிட்டு, அதே மொழி தலைப்புகளைத் தான் இந்தியா முழுமையும் பயன்படுத்த வேண்டும் என்பது அநீதியானது.

3 புதிய குற்றவியல் சட்டங்களையும் உடனடியாக நிறுத்தி வைத்து, முழுமையாக திரும்பப் பெற வேண்டுமென்று தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் சங்கம் வலியுறுத்தியுள்ளன.

ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் வழக்கறிஞர்கள் நீதி மன்ற புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் போராட்டம் ஜுலை முதல் வரும் 8ம் தேதி வரை வழக்கறிஞர்கள் நீதிமன்றப் புறக்கணிப்பு போராட்டம் நடைபெறுகிறது.

புதிய குற்றவியல் சட்டங்கள் நேற்று முன்தினம் அமலுக்கு வந்துள்ள நிலையில், கருப்பு தினமாக அனுசரித்து, நீதிமன்றங்களின் வாயில்களில் உண்ணாவிரதமிருந்தனர்.

ஜுலை 3ல் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் வழக்கறிஞர்கள் சங்கம் முடிவு செய்துள்ளது.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் வெளியேற்றிவிட்டு, ஒன்றிய அரசு தன்னிச்சையாக இந்தச் சட்டங்களை நிறைவேற்றியது குறிப்பிடத்தக்கது.